08.01.2024

எதிரி ஆஜர்.

**SC** 188 / 2016 **PW**27.திரு.ராஜன்பிரபு
**காவல் ஆய்வாளர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

31.07.2015 அன்று இரவு வெங்கடேசன் எங்கு வைத்து குழந்தைகளைப் பார்த்து வழக்கின் விபரங்களைத் தெரிந்து கொண்டார் என்றால் அவரது வீட்டில் வைத்து தெரிந்து கொண்டதாக எனது விசாரணையில் தெரியவந்தது. சிறுமி ஸ்வத்திகா அன்று இரவு வீட்டில் இல்லாதபோது, வெங்கசேடன், சிறுமியை சந்தித்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது விசாரணையில், அசா3 செந்தில்குமார் என்பவர் சம்பவத்திற்கு 4,5 நாட்களுக்கு முன்னர் எதிரியைப் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். 31.07.2015 அன்று அசா3 செந்தில்குமார் என்பவர் அசா1 ஐ சந்திக்க இரவு 10.00, 10.15 மணிக்கு வந்திருந்தார் என்றால் சரிதான். அசா3 காவல்நிலையத்திற்கு வந்தவுடன் சந்தித்தாரா காத்திருந்து சந்தித்தாரா என்று ஞாபகம் இல்லை. அப்படி என்றால் அசா1 ம், அசா3 இருவரும் அன்று இரவு முழுவதும் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. காவல் நிலையத்திற்கு வரும்போது, அசா1 உடன் யார் வந்தார்கள் என்றால் அசா1 உடன் அவரது உறவினர்கள் வந்தார்கள். நகைக்காக கௌரியை கொலை செய்துவிட்டதாக அசா1 ம், அச 3 ம் காவல்நிலையத்தில் வைத்து சொன்னார்கள் என்றால் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்த புகாரில் சொல்லியுள்ளார். அசா3 செந்தில்குமார் என்பவர் அசா1 க்கு 31.07.2015 ம் தேதியன்று மாலை 04.15 மணிக்கு போன் செய்யததாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். எனது விசாரணையில், அசா1 வெங்கசேடன் வீட்டின் கதவைத் தட்டி சங்கீதாவைக் கூப்பிட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற

31.07.2015 ம் தேதியன்று மாலையே அசா4.சங்கீதா என்பவரை நான் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அன்று மாலையே போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக செய்தி கிடைத்தவுடன் புகாரினைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஒரு உடலை காலை பிடித்து இழுத்துச் செல்லும்போது சேலை விலகுவது இயல்பு என்றால் சரிதான். எனது விசாரணையில், வீட்டினை பூட்டிக்கொண்டு தான் அசா4 சங்கீதாவும் அவரது அம்மாவும் தூங்கியதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். வீட்டினைப் பூட்டிக்கொண்டு தூங்கியதால் யார் வந்து சென்றார்கள் என்ற விபரம் பற்றி அசா4,5 க்கு தெரியவாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான். எனது விசாரணையில், பக்கத்து வீட்டில் வசிக்கும் அசா4 சங்கீதா என்பவர், அசா1 ஐ எத்தனை முறை பார்த்தார் என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை. காரணம் அசா1 வேறு ஒரு பெண்ணுடன் கூடலூரில் குடும்பம் நடத்தியதால் இறந்த கௌரியின் வீட்டிற்கு அவ்வப்போதுதான் வந்து போவார் என்று சொன்னால் சரியல்ல. எனது விசாரணைப்படி, பார்வை மகஜர் சாட்சி அசா6 வெங்கடேஷ்பாபு என்பவரின் முகவரி, திருவள்ளுவர் நகர், மெயின்ரோடு, நேருநகர், மலைமகள் நகர் ஆகும். எனது விசாரணையின் படி அசா6 வெங்கடேஷ்பாபு, சம்பவ இடமான முத்துச்செல்வி இல்லத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். அதுபோல, அசா6 ன் வீட்டின் மாடியில் அசா1 ம் அவரது மனைவி கௌரியும் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி, பார்வை மகஜர் தயார் செய்யும்போது சாட்சியின் முன்னிலையில் தான் தயார் செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு தயார் செய்யும்போது, இவ்வழக்கின் சாட்சி அசா6 ஐ சம்பவ வீட்டிற்குள் நான் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. அனுமதித்தேன். அசா6 சம்பவ இடத்திற்குள் நான் அனுமதிக்கவில்லை என்றும் சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சி, பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பிரதாய்ததிற்காக

பின்னிட்டு அசா6 இடம் பார்வை மகஜர், அத்தாட்சியில் கையொப்பம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அசா7 சேகர், எனது விசாரணையில், அன்று மதியம் 03.00, 03.30 மணியளவில் கௌரி இரத்த வெள்ளத்தில் கிடந்ததை அசா7 பார்த்ததாக சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. அவ்வாறு இரத்தவெள்ளத்தில் கிடந்த கௌரியை அசா1 தூக்கி பிடித்துக்கொண்டிருந்ததாக அசா7 எனது விசாரணையில் சொல்லவில்லை. அதேபோல், அன்று மாலை 03.00, 03.30 மணியளவில் ஆம்புலன்சுக்கும், போலிசுக்கும் தகவல் சொன்னதாக அசா7 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அன்று மாலை 03.00, 03.30 மணியளவில் யாரோ தகவல் சொல்லி ஆட்டோ வந்து, அந்த ஆட்டோவில் கௌரியை ஏற்றிகொண்டு சென்றதாக அசா7 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 31.07.2015 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் அசா7 தூங்கிக்கொண்டிருக்கும்போது, சம்பவ இடத்தில் இருந்து சத்தம் கேட்டது என்றும் நான் ஓடிச்சென்று பார்த்தேன் என்று எனது விசாரணையில் அசா7 சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த நேரத்தில் போலிசுக்கு தகவல் சொல்லி ½ மணி நேரத்தில் போலிசார் வந்துவிட்டார்கள் என்று அசா7 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபால் சம்பவ இடத்தில் அசா1 ம், சில பெண்களும் கௌரியைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்தார்கள் என்று அசா7 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று அசா9 ஆண்டவர் மற்றும் அவரது சொந்தபந்தங்களும் உடன் அசா1 ம், அசா1 ன் வீட்டிற்கு சென்றதாக என்று அசா9 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று அசா1 ன் வீட்டிற்குச் சென்று அசா9, தனது சின்னப்பேத்தி அசா2 உடன் பேசியதாக எனது விசாரணையில் அசா9 சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு முதல்நாள் இறந்த கௌரியுடன் அசா9 போனில் பேசியதாக எனது விசாரணையில் அசா9 சொல்லியுள்ளார். அது சம்பந்தமாக CDR எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எங்கள் வழக்கு கோப்பில் உள்ளது. ஆனால்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்சொன்னவாறு அசா9ம் அவரது மனைவியும் இறந்த கௌரிக்கு பேசவில்லை என்றும் அதனால் தான் CDR பதிவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசா10 செல்லத்துரை என்பவர் எனது விசாரணையில், அசா9 ஆண்டவர் என்பவர் சம்பவ இடத்தில் வைத்து தனது பேத்திகளுடன் பேசிக்கொண்டிருந்ததாகதவும், அசா9 மற்றும்அசா10ம் அவரது உறவினர்களும் அசா1ன் வீட்டி சென்றதாக அசா10 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா10ஐ நான் விசாரணை செய்யாமல் கையொப்பம் மட்டும் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனது விசாரணை படி. 31.07.2015ம் தேதியன்று இரவு 09.00 மணிக்கு அசா1, 9, 10 ஆகியோர் எங்கு இருந்தார்கள் என்று நினைவில் இல்லை. அசா11 ஈஸ்வரி எனது விசாரணையில், நான் போலிசாரிடம் பேசவேயில்லை என்றும் அவர்களாகவே எழுதிக்கொண்டார்கள் என்றும் சொல்வது சரியா தவறா என்றால் தவறு. அசா11 ஈஸ்வரி எனது விசாரணையில்., தனது மகளிடம் 2 நிமிடம் தான் பேசியிருப்பேன் என்று கூறவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று அசா1,9,10,11 ஆகியோர் அசா1ன் வீட்டிற்குச் சென்றதாக எனது விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.

1வது எதிரி VAOவின் முன்னிலையில் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் அதசாஆ.7ல் எத்தனை மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது எத்தனை மணிக்கு முடிக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஒப்புதல் வாக்குமூலம் தொடங்கியநேரமும், முடிவுற்ற நேரமும் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் 02.08.2015ம் தேதியன்று காலை 05.30 மணிக்கு காவல் நிலையம் வந்ததாகச் சொல்லப்பட்டடுள்ளது. எனது விசாரணையில், அசா13 VAO தனக்கு தகவல் வந்தவுடன் ஆரப்பாளையத்தில் இருந்து நான் காவல்நிலையம் வந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. அதேபோல், தலையாரியை போன் செய்து வரச்சொன்னதாக அசா13 எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபால் தலையாரி

மாடக்குளத்தில் இருந்து வந்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா13 மற்றும் தலையாரியை காவல்நிலையம் வரச்சொல்லி அழைப்பாணை எதுவும் சார்வு செய்யப்படவில்லை. அசா13 மற்றும் தலையாரியை காவல்நிலையம் வரச்சொல்லி யார் காவல்நிலையத்தில் இருந்து தகவல் சொன்னார்கள் என்று நினைவில்லை. உண்மையிலேயே அசா13 ம் தலையாரியும் காவல்நிலையத்திற்கு வரச்சொல்லவில்லை என்றும் அவர்கள் காவல்நிலையத்திற்கு வரவில்லை என்றும் அதனால் தான் அசா13 ம் தலையாரியும் வந்த நேரம் நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசா13 ம் தலையாரியும் எந்த வாகனத்தில் எத்தனை மணிக்கு காவல்நிலையத்திற்கு வந்தார்கள் என்று தெரியவில்லை. காவல்நிலையத்திற்கு முதலில் வந்தது அசா13 ஆ அல்லது தலையாரியா என்றால் இருவரும் ஒன்றாகத்தான் வந்தார்கள். குவிமுச படி புலன்விசாரணை ஆரம்பித்தபிறகு, VAO-விடமோ, VAO முன்னிலையிலோ கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் செல்லாது என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்ததாகச் சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை எழுதியது யார் என்றால், அந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் தலைமை காவலர் 1512 திரு.அசோகன் என்பவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி தலைமை காவலர் இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் ஆனால் சாட்சிப்பட்டியலில் அவர் சேர்க்கப்படவில்லை. உண்மையிலேயே தலைமை காவலர் ஒப்புதல் வாக்குமூலங்களை கணினியில் தட்டச்சு செய்யவில்லை என்றும் அதனால் தான் அவரை சாட்சியாக இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கின் சொத்துக்களை கைப்பற்றுவதற்காக எதிரி விஸ்வநாதன் வீட்டிற்கும் அசா13, தலையாரி மற்றும் நான் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நான் அரசு வாகனத்திலும் அசா13 ம் தலையாரியும் அவர்களின் இரு சக்கர வாகனத்திலும் வந்தார்ர்கள். அசா13 பெண் என்பதால்

அவருக்கு துணையாக எத்தனை பெண் போலிசாரை மேற்படி இடத்திற்கு அழைத்துச் சென்றேன் என்றால் பெண் போலிசார் யாரையும் உடன் அழைத்துச் செல்லவில்லை. கொலை வழக்குகளில் புலன் விசாரணை அதிகாரி ஆய்வாளர் தான் என்றால் சரிதான். கொலை வழக்குகளில் கைப்பற்றுதல் மகஜரில் பொருட்களை கைப்பற்றுவதற்கு சார்பு ஆய்வாளருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். FED வங்கி எத்தனை அறைகள் கொண்டது என்றால் சரியாகத் தெரியவில்லை. FED வங்கிக்கு லிப்டில் சென்றேனா படி வழியாகச் சென்றேனா என்றால் நினைவில் இல்லை. FED வங்கியின் முன்புற வாசலில் CCTV கேமிராக்கள் இருந்த விபரத்தை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன். FED வங்கியின் அருகில் என்னென்ன கடைகள் நிறுவனங்கள் உள்ளது என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் அந்த விபரங்கள் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்பதால் தெரிந்து கொள்ளவில்லை. உண்மையிலேயே FED வங்கிக்கு நான் போகததால் தான் வங்கிக்கு செல்ல லிப்ட் இருந்ததா அக்கம் பக்கம் உள்ள கடைகள் நிறுவனங்கள் பற்றி எனக்குத் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் மோப்பநாய் சந்தேகப்படும்படியாக எந்த நபரையும் பிடிக்கவில்லை என்றால் சரிதான்., இந்த வழக்கில் கைப்பற்றட்டதாகச் சொல்லப்படும் கை கிளவுசிற்கும், கத்திக்கும் ரசீது எதுவும் நான் கைப்பற்றவில்லை. அசா16 சரவணன், கத்தி என்ன கம்பெனி, அதன் அளவு என்ன என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் கத்திபோல் எல்லா கடைகளிலும் கிடைக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கின் கத்தி அது போன்று என்னால் ஒரு கடையில் பெறப்பட்டு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. Office hours என்பது வேறு Business hours என்பது வேறு என்றால் Office hours என்பது அவர்கள் அலுவலகம் வரும் நேரம். Business hours என்பது வேலை செய்யும் நேரம் ஆகும். FED வங்கியின் Office hours மற்றும் Business hours என்னவென்றால் Office hours 10.00 to 05.00 PM ஆகும். Business hours 10.00 முதல் 03.30 மணி வரை ஆகும். FED வங்கி என்பது

RBI க்கு கீழ் இயங்கும் வங்கி என்றால் சரிதான். அப்படி என்றால் RBI ன் வழிமுறைகளைத்தாண்டி FED வங்கி எதுவும் செய்யமுடியாது என்றால் சரிதான். RBI வழிமுறைப்படி Business Hours தாண்டி வணிகம் செய்யமுடியாது என்றால் சரிதான். FED வங்கியின் Networking system அந்த வங்கியின் கட்டுப்பாட்டில் இல்லை என்றால் சரிதான். அண்ணாநகர் FED வங்கியின் CCTV கேமிராக்களை எந்த நிறுவனம் கையாள்கிறார்கள் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. FED வங்கியில் விசாரணை செய்ய அதன் தலைமை இடத்தில் உத்தரவு எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். புலன்விசாரணை செய்ய FED வங்கிக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அந்த வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. எனது புலன்விசாரணைப்படி FED வங்கியில் எத்தனை CCTV கேமிராக்கள் உள்ளது என்றால் விசாரணை செய்தேன் ஆனால் குறிப்பிட்டு எனது விசாரணையில் சொல்லவில்லை. அந்த CCTV கேமிராக்கள் எந்த நிறுவனத்தைச் சார்ந்தது என்றும் அதன் Pixels Quality போன்ற விபரங்களை நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. FED வங்கியின் Hard disck NVR ஆ அல்லது DVR ஆ என்றால் NVR ஆகத்தான் இருக்கும். NVR ல் capacity, making company மற்றும் Making number போன்ற விபரங்கள் என்னவென்றால் தெரியவில்லை. மேற்படி விபரங்களை நான் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் விசாரணைக்கு அது தேவைப்படவில்லை என்பதால் தெரிந்துகொள்ளவில்லை. FED வங்கியின் CCTV கேமிராவின் User ID,. Password என்னவென்றால் நான் அதைக் கைப்பற்றவில்லை. மேற்படி FED வங்கியின் CCTV கேமிராக்கள் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை Reset ஆகும் என்றால் 30 நாட்களில் Reset ஆகும். FED வங்கியின் CCTV footage களை எவ்வளவு நேரத்தில் ஆய்வு செய்தேன் என்றால் சுமார் 2 மணி நேரம் இருக்கலாம். FED வங்கி CCTV கேமிராவின் எந்த கேமிராவின் எண்ணை நான் ஆய்வு செய்தேன் என்றால் நுழைவாயில் மற்றும் நகை

அடமானம் வைக்கும் இடத்தில் இருந்த 2 கேமிராக்களை மட்டும் ஆய்வு செய்தேன். அந்த கேமிராக்களின் எண் பற்றி குறிப்பிடவில்லை. ஒரு நிறுவத்தில் பல கேமிராக்கள் மட்டும் இருக்கும் போது குறிப்பிட்டு 2 கேமிராக்களை மட்டும் ஆய்வு செய்தது ஏன் என்றால் அந்த இரண்டு கேமிராக்கள் மட்டும் தேவைப்பட்டதால் அவற்றை மட்டும் ஆய்வு செய்தேன். எனக்கு மேற்படி கேமிராக்களின் பதிவுகளை copy செய்து கொடுத்தது யார் என்றால் அந்த வங்கியின் பணியாளர் பதிவு செய்து கொடுத்தார். அந்த வங்கி பணியாளரின் பெயரியும் அவரையும் நான் விசாரிக்கவில்லை. DVR ல்இருந்து CD க்கும் CD ல் இருந்து pendrive க்கும் copy செய்தது யார் என்றால் அவை அனைத்தும் அந்த வங்கியின் பணியாளர்கள் தான் copy செய்தார்கள். கேமிராவில் இருந்து பதிவு செய்ததாகச் சொல்லப்படும் பணியாளர்களுக்கு கேமிராவின் user id. password ஆகியவை தெரியாது என்றும் வங்கியின் தலைமையிடத்தில் தான் இருக்கும் என்றும் அந்த வங்கியின் பணியாளர்கள் அந்த பதிவை பதிவு செய்திருக்க முடியாது என்றும் அதனால் நான் FED வங்கி பணியாளர்களிடம் இருந்து கேமிரா பதிவைப் பெற்றிருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. CCTV Footage என்பது primary evidence கிடையாது என்றும் secondary evidence என்று சொன்னால் சரிதான். CCTV footage களை பதிவு செய்ததற்கு இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 65B சான்றிதழ் கட்டாயம் என்றால் சரிதான். இந்த வழக்கில் 65B சான்றிதழ் நான் பெறப்படவில்லை என்றும் அதனால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சான்றிதழ் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் சான்றிதழ் கொடுப்பவர் CCTV Footage கேமிராக்கள், மற்றும் கணிணியில் நுட்பமான அறிவு பெற்றிருக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். அதேபோல் நான் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கேமிராவின் பதிவு மொத்தம் எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் அது பற்றி எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை. கேமிராக்களின் பதிவை copy செய்யும்போது FED வங்கியின் எந்த இடத்தில் வைத்து Copy செய்து கொடுத்தார்கள் என்றால் Manager

அறையில் வைத்து கொடுத்தார்கள். அண்ணாநகரில் உள்ள FED வங்கியின் CCTV footage-ன் networking system Control unit எங்கு இருந்தது என்றால் அதுபற்றி தெரியவில்லை. நேரடியாக computer ல் இருந்து கேமிரா பதிவுகளை பதிவு செய்து கொடுத்தார்களா என்றால் அவர்கள் எதில் இருந்து பதிவு செய்து கொடுத்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை. நீதிமன்றத்தில் CD மற்றும் Pendrive தாக்கல் செய்யப்பட்டுள்ளதில் முதலில் CD யில் பதிவு செய்யப்பட்டதா அல்லது pendrive-ல் கேமிரா பதிவுகள் பதிவு செய்யப்பட்டதா என்றால் pendrive ல்தான் முதலில் பதிவு செய்யப்பட்டது. அந்த பதிவுகளை அவர்கள் எவ்வாறு பதிவு செய்தார் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கின் தாக்கல் செய்யப்பட்டுள்ள கேமிரா பதிவுகளுக்கும் வங்கி மேலாளருக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேலாளர் தம்மிச்சையாக கேமிரா பதிவுகளை பதிவு செய்துதரவில்லை. CCTV Footage களை tamper செய்து எங்கள் காவல்துறை சைபர் கிரைம் விங் தான் வழக்கின் சான்று பொருளான CCTV Footage களை தயார் செய்தார்கள் என்று சொன்னால் தவறு. இந்த வழக்கில் FED வங்கியின் மேலாளர் பானுமதி அவர்கள் அரசு தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே FED க்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் அதற்கு பயந்து கொண்டு FED வங்கியின் மேலாளர் 65B சான்று கொடுக்கமாட்டேன் என்றும் சாட்சியம் அளிக்க வரமாட்டேன் என்றும் சொல்லிவிட்டார் என்றால் சரியல்ல. FED வங்கியின் மேலாளரிடம் இருந்து பெறப்பட்டதாகச் சொல்லப்படும் FED Bank Registration, வங்கியின் வருகைப்பதிவேடு, FED வங்கியின் வாடிக்கையாளர் பதிவேடு, நகை ரசீது, CCTV Footage ஆகியவை என்னால் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அசா19 இடம் இருந்து எங்கு வைத்து, அவரது வீட்டின் எந்த அறையில் வைத்து சான்று பொருள் கைப்பற்றப்பட்டது என்றால் அவரது வீட்டின் ஹாலில் வைத்து கைப்பற்றப்பட்டது. அசா19 ன் வீடு எந்த தளத்தில் உள்ளது என்றால் குறிப்பிடவில்லை. உண்மையிலேயே அசா19 ன் வீட்டிற்கு நான்

செல்லவில்லை என்றும் அதனால் தான் அவர் வீடு எந்த தளத்தில் உள்ளது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி விஸ்வநாதன் வீடு எந்த திசை நோக்கி தலைவாசல் உள்ள வீடு என்றால் அந்த விபரம் இந்த வழக்கிற்குத் தேவையில்லை என்பதால் குறிப்பிடவில்லை. எதிரி விஸ்வநாதன் வீடு எத்தனை வீடுகள் கொண்ட காம்பவுண்டு வீடு என்றால் வழக்கிற்கு அந்த விபரங்கள் தேவையில்லாததால் நான் வழக்கில் குறிப்பிடவில்லை. எதிரி விஸ்வதான் வீட்டில் எத்தனை அறைகள் உள்ளது என்றால் அந்த விபரங்கள் தேவையில்லாததால் நான் வழக்கில் குறிப்பிடவில்லை. எதிரி விஸ்வநாதன் வீட்டில் எந்த அறையில் இருந்து சான்று பொருள் கைப்பற்றியதாக அத்தாட்சியில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே நான் எதிரி விஸ்வநாதன் வீடிற்குச் செல்லவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டதால் தான் அந்த விபரங்கள் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. FED வங்கியில் கொடுக்கப்பட்ட கேமிரா பதிவுகளை எந்த software பயன்படுத்தி பதிவு செய்து கொடுத்தார்கள் என்று நான் விசாரிக்கவில்லை. FED ல் நான் ஆய்வு செய்தபோது, அந்த வங்கியின் Legal team அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. யார் முன்னிலையில் வழக்கின் சொத்து கைப்பற்றபடுகிறதோ அவர் மூலம் தான் அந்த அத்தாட்சி நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்படும் என்றால் சரிதான். நான் FED வங்கிக்கு விசாரணைக்காக எத்தனை முறை சென்றேன் என்றால் 2 முறை இருக்கும். எந்தெந்த தேதிகளில் எதிரியை Police custody இல் எடுத்து வங்கிக்கு அழைத்துச் சென்றேன் என்றால் 12.08.2015 அன்று எதிரியை FED வங்கிக்கு அழைத்துச் சென்றேன். 12.08.2015 ம்தேதியன்று நானும் எதிரிகளும் வங்கிக்குச் சென்ற பதிவு CCTV கேமிராவில் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள CCTV Footage ஆனது, 12.08.2015 ம்தேதியன்று எதிரியை காவல் கட்டுப்பாட்டி எடுத்த பிறகு எனது வற்புறுத்தால் எதிரிகளை நடித்துக் காட்டச்சொல்லி பதிவு செய்யப்பட்டவைகள் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கேமிரா

பதிவுகள் என்றால் சிரியல்ல. உண்மைமையிலேயே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது 31.07.2015 ம் தேதி பதிவுகள் தான் என்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படுள்ள பதிவுகளை எதிரிகளை விசாரணைக்காக 12.08.2015 ம்தேதி அழைத்துச் சென்ற கேமிரா பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் தான் இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்து ஒரு முடிவுக்கு வரமுடியும் என்றால் 12.08.2015 ம் தேதிய பதிவு இந்த வழக்கிற்கு தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. மதுரை லெகரோ ஜவுளிக்கடை மதுரையில் உள்ள பெரிய துணி கடை என்றால் சரிதான். அந்த துணிக்கடையிலும் CCTV Footage க்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த கடையின் கேமிரா பதிவுகளை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். லெகெரோ துணிக்கடையில் கம்ப்யூட்டர் பில் தான் போடுவார்கள் என்றால் சரியல்ல. அசாபொ.24 லெகரோ நிறுவன பில் கணினி பில் என்றால் சரிதான். அந்த பில்லில் ஒவ்வொரு பொருளுக்கும் என்ன விலை என்று போடாமல் மொத்த விலை மட்டும் தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே பில் போடுவதாக இருந்தால் ஒவ்வொரு பொருளுக்கும் என்ன விலை என்று போட்டுதான் மொத்த பில் போடுவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசாபொ.24 லெகரோ ஜவுளிக்கடை பில்லானது என்னால் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசா12 அருண் ஐ police custody ல் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று மாலை நாளிதழ்கள் அனைத்திலும் பருவப்பெண் கற்பழித்துகொலை, என்றும் டிவி சரிசெய்பவர் கைது என்று செய்தி வந்திருந்தது என்றால் வந்திருக்கலாம். உண்மையிலேயே போலிசார் கைது செய்து வைத்திருந்ததால் தான் செய்தித்தாளில் அவ்வாறு செய்தி வந்தது என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் பிரேத விசாரணைப்படியும், பிரேத பரிசோதனைப்படியும் இறந்த கௌரியின் இரத்த வகை என்னவென்றால் அவ்வாறு இரத்த வகை குறிப்பிடப்படவில்லை. பிரேத பரிசோதனை

செய்யப்பட்ட மருத்துவரால் வழக்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்த கௌரியின் இரத்த வகை பற்றிய குறிப்பு இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் சரித்திரத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவருக்கு எப்போது கொடுக்கப்பட்டது என்றால் பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதத்துடன் கொடுக்கப்பட்டது. எந்த தேதியில் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் 01.08.2015 ம்தேதியன்று கொடுக்கப்பட்டுது. 31.07.2015 ம்தேதியன்று பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பியதாக சொல்வது தவறு என்றால் சரிதான். பிரேத பரிசோதனைக்கு வழங்கிய வேண்டுகோள் கடிதத்துடன் கொடுக்கப்பட்ட வழக்கின் சரித்திரத்தின் படி வழக்கின் சட்டப்பிரிவு சந்தேக மரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சந்தேக மரணம் என்று குறிப்பிடவில்லை. கொலை என்று தான் குறிப்பிட்டுள்ளேன். MLC வழக்குகளில் இறந்த பிரேதத்தினை அரசு மருத்துவமனையில் பிரேத்தினை அனுமதிக்கும்போது விபத்து பதிவேட்டில் பிரேத்தில் இருந்த காயங்கள் குறித்து பதிவு செய்த பிறகு தான் பிரேதத்தை உள்ளே அனுமதிக்கப்படும் என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டள்ள 9 காயங்களும் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்படவில்லை. பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்த கௌரியின் உடலில் விந்தணுக்கள் காணப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விந்து கரைகளை வைத்து எதிரியைக் கண்டுபிடிக்க முடியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் 1,2 எதிரிகளிடம் இருந்து மட்டும் தான் விந்தணுக்கள் பரிசோதனைக்கு பெறப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் 1,2 எதிரிகளின் விந்துக்கரைகள் வழக்கிற்கு முரண்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரான அசா1ன் விந்தணுக்கள் பரிசோதனைக்குப் பெறப்படவில்லை என்றால் சரிதான். வழக்கிற்குத் தேவையில்லாததால் அசா1 இடம் இருந்து விந்தணுக்கள் பரிசோதனைக்குப் பெறப்படவில்லை. 1,2 எதிரிகளின் விந்தணுக்கள் வழக்கில் ஒத்துப்போகவில்லை என்றும் அப்படி இருக்கையில் இறந்த கௌரியை வன்புணர்ச்சி செய்தது பற்றி

கண்டறிய வேண்டியது ஆய்வாளரின் பொறுப்பு என்றால் சரிதான். ஏன் அசா1 ன் விந்தணுக்களை பரிசோதனைக்கு பெறப்படவில்லை என்றால் வழக்கிற்குத் தேவைப்படவில்லை என்பதால் பெறவில்லை.

உண்மையான குற்றவாளியே அசா1 தான் என்றால் சரியல்ல. அசா1 ஐக் காப்பாற்றத்தான் அவரது கைலியை விந்தணு பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றும் அசா1 இடம் விந்தணுக்கள் பெற்றுவிட்டால் அது வழக்கில் ஒத்துப்போய்விடும் என்று திட்டமிட்டு நானும் அசா1 ம் கூட்டு சதி செய்து இந்த வழக்கின் தன்மையை மாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல. எச்சில், வியர்வை, மற்றும் ஒருவர் முத்தமிடுபோது ஏற்படும் love bite மூலம் காயங்கள் இருக்கும் என்றும் எச்சில், வியர்வை போன்றவற்றை வைத்து வழக்கின் குற்றவாளியை DNA பரிசோதனை மூலம் கண்டுபிடிக்க இயலும் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் DNA பரிசோதனைக்கு முயற்சி செய்யவில்லை என்றால் இறந்த பெண்ணிடம் இருந்து எடுக்கப்பட்ட ஸ்வாபில் பெர்மடோசோவா காணப்படாததால் DNA பரிசோதனைக்கு அனுப்ப தேவைப்படவில்லை. DNA பரிசோதனை ஒரு துல்லியமான பரிசோதனை என்றால் சரிதான். DNA பரிசோதனைக்கு வழக்கின் சான்று பொருட்களை உட்படுத்தியிருந்தால் அசா1 இந்த வழக்கில் மாட்டிக்கொள்வார் என்பதால் தான் DNA பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரே இரத்தம் என்பது வேறு என்றும் ஒரே இரத்த வகை என்பது வேறு என்றால் சரிதான். இறந்த கௌரியின் உதட்டில் இருந்த காயங்கள் அவர் உயிருடன் இருக்கும் போது இருந்த காயங்கள் என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கை பெற்ற பின்னர் கூட கௌரியின் உடலில் இருந்த காயங்கள் குறித்து வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான நான் ஏன் அக்கறை கொள்ளவில்லை என்றால் வழக்கிற்கு அவசியம் இல்லை என்பதால் விசாரிக்கவில்லை. பிரேத விசாரணை அறிக்கையில் இறந்த கௌரி கற்பழிக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அப்படி எனில் எவ்வாறு பிரிவு 376 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிரியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் 376 இதச பிரிவை

சேர்த்துள்ளேன். அதசாஆ.24 item 1,2,4,5,6,7,8,9,10,11,16,19 ல் முடிவுகள் கண்டறியப்படவில்லை No remarks என்று குறிப்பிட்டப்படுள்ளது என்றால் சரிதான். Item 3,12,14,15,17,18,20 ஆகியவற்றின் முடிவுகள் inconclusive என்று குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். அதசாஆ.24 ல் எங்குமே conclusive என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கத்தி என்றால் கைப்பிடி மற்றும் Steel body யும் சேர்த்தது தான் என்றால் சரிதான். ஒருவரைக் குத்தும்போது கத்தியின் ராடில் ஒரு வகை இரத்தமும், கைப்பிடியில் ஒரு வகை இரத்தமும் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அதசாஆ.24 ல் கத்தியின் இரத்த வகை B என்றும் கத்தியின் கைப்பிடியில் உள்ள இரத்த வகை உறுதி செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனவே மேற்படி கத்திக்கும் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் அசாபொ.19 கத்திக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் சான்று பொருள் கத்தியானது அசா1 ஐ காப்பாற்றுவதற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சான்று பொருட்களை இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்படும் போது, இரத்த வகை குறிப்பாக A Positive, B Positive, O Positive என்று தான் வரும் என்றால் சரிதான். மேற்சொன்னவாறு இரத்த வகை குறிப்பிட்டு வந்தால் தான் சான்று பொருட்கள் வழக்கிற்கு சாதகமாக இருக்கும் என்றால் சரிதான். இல்லை எனில் அவை எதிரிகளுக்கு சாதகமாகிவிடும் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகளிடம் இருந்து இரத்த மாதிரிகள் பெறப்படவில்லை என்றால் சரிதான். Latest Technology FSL படி இரத்தினை விந்தணுவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் எதிரிகளைக் கண்டுபிடிக்க முடியும் என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து இரத்த மாதிரிகள் எடுத்து ஒப்பீடுக்கு அனுப்பினால் எதிரிகளுக்கு சாதகமாக அமையும் என்றும் அசா1 ஐக் காப்பாற்ற தான் எதிரிகளிடம் இருந்து இரத்த மாதிரி எடுக்க முயற்சி செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அசா1 ன் இரத்த மாதிரி இந்த வழக்கில் பெறப்படவில்லை. சம்பவ இடத்தில் முடிகள் எதுவும் தென்பட்டா என்றால் தென்படவில்லை. கைப்பற்றப்பவில்லை.

இந்த வழக்கின் எதிரிகளிடம் இருந்து, நகம், முடி, உமிழ்நீர் ஆகியவற்றைக் கைப்பற்றி இரசாயண பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். நகைகளில் கைரேகை பதிய வாய்ப்புண்டு என்றால் சரியல்ல. மொத்தமாக இந்த வழக்கில் இறந்த கௌரி, அசா1 வெங்கடேசன், மற்றும் எதிரிகளிடம் இருந்து DNA பரிசோதனை செய்திருந்தால், மேற்சொன்ன பரிசோதனைகளை Latest technology FSL மூலம் அடையாளம் கண்டிருக்க முடியும் என்றால் சரிதான். எனது புலன்விசாரணையின் குறைபாடு மற்றும் அசா1 ஐக் காப்பாற்றவேண்டும் என்ற ஆர்வம் தான் மேற்படி இரசயான பகுப்பாய்வினை மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் அசாபொ.19 கத்திக்கும் அசாபொ.33 கைப்பிடிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் அசாபொ19 கத்தி மற்றும் அசபொ.33 ஐ நான் ஒன்று சேர்ந்து ஒப்பிட்டு பார்க்கவில்லை என்றால் புலன்விசாரணைக்காக ஒன்றுசேர்த்துப் பார்த்தேன். ஆனால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கத்தியும் கைப்பிடியும் ஒன்று சேர்ந்தது தான் என்பதற்காக ஒப்பீட்டு ஆய்விற்கு அனுப்பினேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் சான்று பொருட்களில் இருந்த இரத்தங்கள் அனைத்தும் இரத்த வங்கியிலிருந்து என்னால் பெறப்பட்டு உற்பத்திசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பவத்தை நேரடியாகப் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சிகள் அனைவரும் சூழ்நிலை சாட்சிகள் என்றால் சரிதான். பொதுவாக சூழ்நிலை சாட்சியத்தைப் பொறுத்தவரை முன்பகைக்கு (motive) முக்கியப் பங்கு உண்டு என்றால் சரிதான். இவ்வழக்கில் முன்பகை குறித்து சாட்சியோ, சான்றாவணமோ தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கு அவசியம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. அசா1 வெங்கடேசன் தனது புகாரிலும், எனது விசாரணையிலும், எதிரிக்கும் தனக்கும் தனது குடும்பத்தாருக்கும் முன்பகை இருந்ததாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா9

ஆண்டவர், அவருக்கும் எதிரிக்கும் எவ்வித முன்பகை இருந்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அசா1 வெங்கடேசனின் குடும்பத்தாரும் இறந்த கௌரியின் குடும்பத்தாருக்கும் இடையே பல வருடங்களாக பேச்சுவார்த்தை இல்லை என்பது குறித்து எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் தெரியாது. அசா9 எனது விசாரணையில், "சம்பவம் நடப்பதற்கு 1 வாரத்திற்கு முன்பு நான் போன் போட்டு விசாரித்தேன் என்றும் என்னிடமும் அவர் அம்மாவிடமும் அவர் மகள் கௌரி பேசினார் என்றும் பேசும்போது, எனக்கு விசுவும் அவரது கூட்டாளியும் வீட்டிற்கு வந்து தொந்தரவு தருகிறார்கள்" என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அசா11 ஈஸ்வரி, எனது விசாரணையில் "ஒரு வாரத்திற்கு முன்பு, மாமா இல்லாத நேரம் விசு ஆள் கூட்டிட்டு வாரார் என்றும் எனக்கு பயமாக உள்ளது என்று இறந்த கௌரி சொன்னதாக " சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் மேற்படி விஷயத்தை இறந்த கௌரி தனது கணவரிடம் கூறியதாகவும், அதற்கு புகார்தாரர் எதிரியை அமட்டியிருப்பார் போல என்று அசா11 எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா ன்றால் அவ்வாறு சொல்லவில்லை. குற்ற வழக்குகளில் எதிரிகளைப் பிடிப்பதற்கு cell phone. cell phone CDR மற்றும் cell phone tower location ஆகியவை பயன்உள்ளதாக உள்ளது என்றால் சரிதான். எவ்வாறு எதிரிகளைப் பிடிப்பதற்கு செல்போன் பயன்பட்டிற்கு மேற்படி technology பயன்படுகிறதோ அது போல விசாரணை அதிகாரியாகிய நான் சம்பந்தப்பட்ட புலன்விசாரணையில் இருந்தேன் என்றும் எதிரிகளை சம்பந்தப்பட்ட இடத்தில் கைது செய்தேன் என்பதை நிரூபிக்கவும் மேற்படி cell phone technology உதவும் என்றால் சரிதான். நீதிமன்றம் கேட்கும் பட்சத்தில் மேற்படி ஆதாரங்களை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எதிரியைக் கைது செய்ததாகச் சொல்லப்படும் மதுரை மாட்டுத்தாவணி அருகில் தான் நெல் மண்டி வளாகம் உள்ளது என்றால் சரிதான். நெல் மண்டி அருகே ஒட்டியது போல்தான் பூ மார்க்கெட் உள்ளது என்றால் சரிதான். இரண்டும் ஒரே வளாகத்தில் காம்பவுண்டில் அமைந்துள்ளது என்றால்

சரிதான். நெல் மண்டிக்குப் பின்னால் வண்டியுர் கண்மாய் உள்ளது என்றால் சரிதான். நெல்மண்டிக்கு கிழக்கே 100 மீட்டர் தொலைவில் மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் உள்ளது என்றால் சரிதான். நெல்மண்டிக்கு மேற்கே 500 மீட்டர் தொலைவில் மாவட்ட நீதிமன்றம் உள்ளது என்றால் சரிதான். நெல்மண்டிக்கு 50 மீட்டர் தொலைவில் central market உள்ளது என்றால் சரிதான். நெல்மண்டி, பூ மார்க்கெட், நீதிமன்றம், central market ஆகியவை அருகருகே உள்ளதால் அங்கு இரவு பகல் எப்போதும் ஆட்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். நான் சொல்வது போல், எதிரிகளை நெல்மண்டிக்கு அருகே கைது செய்திருந்தால் பொதுமக்களை சாட்சியாக சேர்த்திருக்கலாம் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் பொதுமக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் சாட்சியாக சேர்க்கவில்லை. எனவே வழக்கின் எதிரிகளின் கைது உண்மையிலேயே நான் சொல்வது போல் நிகழவில்லை என்றால் சரியல்ல. 31.07.2015 அன்று இரவே எதிரிகளை சட்டவிரோத காவலில் அடைத்து வைத்துக்கொண்டு அவர்களை சித்ரவதை செய்து, கை, கால்களை உடைத்துவிட்டு அவர்கள் 02.08.2015 அன்று நெல்மண்டி அருகே கைது செய்ய வரும்போது தப்பித்து ஓட நினைத்தபோது அடிபட்டுவிட்டது என்று பொய்யான சங்கதிகளை எதிரிகளின் கைது குறித்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளைக் கைது செய்ய போனபோது என்னுடன் எத்தனை காவலர்கள் வந்தார்கள் மற்றும் அவர்கள் பெயர் என்னவென்றால் சுமார் 4 போலிசார் உடன் வந்தார்கள். அவர்கள் பெயர் தற்போது நினைவில் இல்லை. எதிரிகள் கைது குறித்து காவல்நிலைய பொது நாட்குறிப்பில் பதிவுகள் இருக்கும் என்றால் சரிதான். நான் மேற்சொன்ன 4 காவலர்கள் என்னுடன் எதிரிகளைக் கைது செய்யும்போது வந்தார்கள் என்ற விபரமும் காவல்நிலைய பொது நாட்குறிப்பில் இருக்கும் என்றால் சரிதான். 02.08.2015 ம்தேதி காலை 05.30 மணியளவில் மாடக்குளம் VAO மற்றும் தலையாரி முன்பு எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததகாவும் அதை SS காலனி காவல்நிலையத்தில் வைத்து பதிவு செய்ததகவும் சொல்லியுள்ளதில் உண்மையிலேயே எதிரிகளை

திலகர்திடல் காவல்நிலையத்தில் வைத்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 02.08.2015 ம் தேதியன்று SS காலனி காவல்நிலைய CCTV பதிவுகளைப் பார்த்தால் உண்மையிலேயே எதிரிகள் அங்கு இருந்தார்களா என்று தெரியவரும் என்றால் சரிதான். அந்த கேமிரா பதிவுகளை நீதிமன்றத்தில் தேவைப்படும் போது தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் காவல் ஆணையர் உத்தரவிட்டால் மேற்படி கேமிரா பதிவுகளை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 31.07.2015 அன்று எதிரிகளை சட்ட விரோத காவலில் வைத்திருந்ததால் 02.08.2015 அன்று எதிரிகளை நான் கைது செய்திருக்கவே முடியாது என்றால் சரியல்ல. அதனைத் தொடர்ந்து எதிரிகள் வீட்டில் வழக்கின் சான்று பொருட்களை கைப்பற்றியிருக்க முடியாது என்றும் FED வங்கி, லெகரோ, அழகு மெடிக்கல்ஸ், மீனாட்சி பேன்சி ஸ்டோருக்கு எதிரிகளை அழைத்துச் சென்றிருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. 02.08.2015 ம்தேதியன்று எதிரிகளை நீதிமன்றத்திற்கு ஆஜர் செய்வதற்கு முன்பே எதிரிகளை FED வங்கிக்கு அழைத்துச் செல்லப்பட்டடார்கள் என்றும் அப்போது தான் 1 வது எதிரிக்கு 2 வது எதிரி யார் என்பதே தெரியவந்தது என்றால் சரியல்ல. போலிஸ் வேனில் எதிரிகளை அழைத்துச் செல்லும்போதே, நாங்கள் சொல்வது போல் சொல்லவில்லை என்றால் encounter ல் உங்களை சுட்டுத்தள்ளிவிடுவோம் என்று நாங்களும் காவல் ஆணையரின் சிறப்பு குழுவும் (Special Team)ம் சொல்லி எதிரிகளை மிரட்டினோம் என்றால் சரியல்ல. எனது விசாரணையின் படி 1 வது எதிரியின் அப்பா முன்னால் இராணுவத்தினர் மற்றும் ஓய்வுதியம் பெறும் நபர் என்றால் சரிதான். அதேபோல், 1 வது எதிரிக்கும் அவரது அப்பாவிற்கும் தேனி மாவட்டத்தில் பல ஏக்கரில் விவசாய நிலம் உள்ளது பற்றி எனது விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை. எனவே 1 வது எதிரிக்கு எந்த நேரத்திலும் பணத்தேவை இருந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு அவர் எந்த தொழிலும் தொடங்க அவசியம் இல்லை என்றும் யாருடன் கூட்டு சேர்ந்து தொழில் தொடங்கவில்லை என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் என்னால்

பின்னிட்டு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1 வது எதிரி கொடுத்ததாகச் சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள தொழில் பற்றி எதிரி என்ன தொழில் செய்து வந்தார் என்றும் கூட்டுத்தொழில் செய்து வந்தாரா என்றும் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அது பற்றி அவசியம் இல்லை என்பதால் தெரிந்துகொள்ளவில்லை. உண்மையிலேயே 1 வது எதிரிக்கு தொழில் நஷ்டம் இருந்தது என்றும் அவருக்கு பணத்தேவை இருந்தது என்ற விபரம் பற்றி அவருடன் தொழிலில் கூட்டாளியாக இருந்த நபரை விசாரணை செய்திருந்தால் தெரியவரும் என்றால் சரிதான். 1 வது எதிரி ஒரு Diploma holder என்றும் அவர் மதுரை corporation park ல் அரசு தேர்வுகளுக்காக ஒழுங்காக படித்துக்கொண்டிருந்த மாணவர் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எமகா பைக்கில் தான் 1,2 எதிரிகள் புதூரில் இருந்து பைபாஸ் மலைமகள் நகருக்கு வந்ததாக வழக்கு என்றால் சரிதான். புதூரில் இருந்து பைபாஸ் வரவேண்டும் என்றால் கோரிப்பாளையம், சிம்மக்கல், வடக்கு வெளிவீதி, பெரியார் பேருந்து நிலையம், பைபாஸ் RTO பஸ் டிப்போ ஆகியவற்றைத்தாண்டி தான் மலைமகள் நகர் செல்லமுடியும் என்றால் சரிதான். மேற்படி பகுதிகள் அனைத்தும் நகரின் முக்கிய மையங்கள் என்றால் சரிதான். மேற்படி 1,2 எதிரிகள் யமகா பைக்கில் அங்கிருந்து சென்றிருந்தால் அங்குள்ள CCTV கேமிராக்களில் அந்த image பதிவாகியிருக்கும் என்றால் சரிதான். வழக்கின் புலன்விசாரணைக்காக அனைத்து முக்கியமான சந்திப்புகளிலும் உள்ள கேமிராக்களை ஆய்வு செய்தபோது போக்குவரத்து நெரிசல் காரணமாக எதிரிகள் சென்ற பதிவைக் கண்டுபிடிக்க இயலவில்லை. உண்மையிலேயே 1,2 எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் செல்லவில்லை என்பதால் தான் மேற்படி கேமிராக்களில் பதிவுகள் இல்லை என்றும் தற்போது வழக்கிற்காக போக்குவரத்து நெரிசல் இருந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே 1 வது எதிரிக்கு 31.07.2015 ம்தேதி 2 வது எதிரியை யார் என்றே தெரியாது என்றும் அதனால் 1 வது எதிரி, 2 வது எதிரியை வண்டியில் ஏற்றிச் சென்றிருக்க

முடியாது என்றால் சரியல்ல. FED வங்கியின் நுழைவாயிலிருந்த CCTV கேமிராக்களில் மேற்படி வழக்கின் சான்று பொருளான யமகா பைக் இருந்து, எதிரிகள் இறங்கி போனதாகவோ, அங்கு பைக்கை நிற்பாட்டியதாகவோ கேமிரா பதிவுகளை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். புகாரினை 8 மணிக்கு பெற்றபின்னர் எத்தனை மணிக்கு கௌரியின் பிரேதத்தினை பார்த்தேன் என்றால் பிணவைப்பறையில் பார்த்தேன். நான் பிரேதத்தைப் பார்த்தது தொடர்பாக எவ்வித சான்றாவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்த கௌரியின் பிரேதத்தை நான் பார்த்தபோது தோராயமாக மணி என்ன இருக்கும் என்றால் 31.07.2015 அன்று இரவு 11.00 மணிக்கு மேல் இருக்கும். எத்தனை மணிக்கு எந்த தேதியில் யார் மூலம் பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன் என்றால் முதல்நிலை காவலர் 1623 திரு.செந்தில்குமார் என்பவர் மூலம் 01.08.2015 ம் தேதி 10.30 மணிக்கு மேல் பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பினேன்.

சம்பவ இடத்தில் இருந்த என்னால் இறந்த கௌரியின் பிரேதத்தைப் பார்த்திருக்கவே முடியாது என்றும் இறந்த கௌரியின் பிரேதத்தை பிண வைப்பறையில் சென்று பார்த்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரேத விசாரணையின் போது, கௌரியின் உடலில் இருந்த காயங்களும் பிரேத பரிசோதனையின் போது இருந்த காயங்களும் ஒத்துப்போனதா என்றால் ஒத்துப்போனது. பிரேத விசாரணையின் போது இருந்த பஞ்சாயத்தார்கள் சாட்சிகளை இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகளாக சேர்த்தால் அசா1 கௌரியை கொடுமைப் படுத்தியவிஷயமும், கௌரியின் நடத்தையில் அசா1 செய்த பிரச்சனைகளும் தெரியவரும் என்பதால் தான் அவர்களை நான் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரணை செய்யவும் இல்லை சாட்சிகளாக சேர்க்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

இறந்த கௌரியின் பிரேதத்தை அரசு மருத்துவமனையில் அனுமதிக்க எத்தனை மணிக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன் என்றால் 31.07.2015

அன்று இரவு 08.00 மணிக்குப் பின்பாக வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் யார் மூலம் கொடுத்தனுப்பப்பட்டது என்றால் முதல் நிலை காவலர் 1623 திரு.செந்தில்குமார் என்பவர் மூலம் கொடுத்தனுப்பப்பட்டது. 31.07.2015 ம்தேதி இரவு 08.00 மணிக்கு அரசு மருத்துவமனை பிணவைப்பறையில் இருந்த அசா1 ஆல் 08.00 மணிக்கு SS காலனி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருக்க இயலாது என்றால் சரியல்ல. 31.07.2015 ம்தேதியன்று அசா1 அரசு மருத்துவமனையில் காரில் அவரது பிள்ளைகளுடன் தான் இருந்துள்ளார் என்றும் அதை மேற்படி முதல்நிலை காவலர் திரு.செந்தில்குமார் பார்த்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கின் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவை சுமார் 9 மணி நேரம் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதசாஆ.33 முதல் தகவல் அறிக்கையில் காலம் 14 ல் புகார்தாரரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அதேபோல் காலம் 15 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையும் புகாரும் நீதிமன்றத்திற்கு 01.08.2015 ம் தேதியன்று காலை 05.50 மணிக்குப் பெறப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். அதசாஆ.33 ல் உள்ள எழுத்துக்கள் எனது கையெழுத்து அல்ல என்றால் சரிதான். அதேபோல், பார்வை மகஜர், வரைபடம் ஆகியவற்றை நான் எனது கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். எனக்கு உதவியாக இருந்த தலைமை காவலர் 1522 திரு.அசோகன் என்பவர் எழுதினார். அதசாஆ.3 பார்வை மகஜரில் உள்ள சாட்சியின் கையெழுத்தின் கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியிலும் சாட்சிகளின் கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

அசா1 ன் குழந்தைகள் மரியா மெட்ரிகுளேசன் பள்ளியில் படித்ததாக எனது விசாரணையில் தெரிந்து கொண்டேன். அந்த பள்ளியைச் சேர்ந்த யாரையும் நான் விசாரணை செய்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அவசியப்படவில்லை என்பதால் விசாரிக்கவில்லை.

மேற்படி பள்ளியில் இருந்தவர்களை விசாரணை செய்தால் தான் அசா1 ன் குழந்தைகள் அன்று பள்ளியில் இருந்தார்கள் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவசியப்படவில்லை என்பதால் விசாரிக்கவில்லை. அதேபோல் அந்தப்பள்ளியில் விசாரணை செய்திருந்ததால் தான் அசா1 ன் குழந்தைகளை யார் பள்ளிக்குக் கூட்டி வருவார்கள் என்ற விபரமும், யார் பள்ளியிலிருந்து கூட்டிச் செல்வார்கள் என்ற விபரமும் தெரியவரும் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவசியப்படவில்லை என்பதால் விசாரிக்கவில்லை. போலிசார் முன்னிலையில் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரிதான். Discovery of fact leading to recovery பொறுத்து செல்லுபடியாகும். FED வங்கியிலிருந்து கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் எந்த ஆவணத்திலும் எதிரி விஸ்வநாதனின் பெயரில் இல்லை என்றால் சரிதான். எனது விசாரணைப்படி அசா1 வெங்கடேசன், அசா2 நேகா, அசா3 செந்தில்குமார், அசா4 சங்கீதா, அசா5 சங்கீதாவின் அம்மா, பார்வை மகஜர் சாட்சிகள் வெங்கடேஷ்பாபு மற்றும் சேகர் ஆகியோரை 31.07.2015 ம்தேதியன்று விசாரணை செய்து பிரிவு 161(3) குவிமுச படி வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலங்கள் அனைத்தும் முதல் தகவல் அறிக்கையுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. எந்த தேதியில் மேற்படி சாட்சிகளின் 161 குவிமுச வாக்குமூலங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றால் 02.08.2015 ம் தேதியன்று நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. FED வங்கியின் எந்த ஆவணத்தினலும் அசா17 சரவணன் என்பவரின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ஆய்வாளரின் பயணக்குறிப்பு, பதிவுறுக்கள், காவல் டையரி, வழக்கு விசாரணை நாட்குறிப்புகள் அனைத்தும் காவல் ஆணையருக்கு அனுப்பி வைக்கப்படும் என்றால் சரிதான். காவல் நிலைய வாகனத்தின் டிரைவரும் vehicle diary பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். அந்த vehicle diary ல் 02.08.2015 ம்தேதியன்று எதிரிகளை கைது செய்யப்பட்டதாகச்

சொல்லப்படும் இடம் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். தற்போது அந்த vehicle diary எங்கு இருக்கும் என்றால் காவல் உதவி ஆணையர் மாநகர ஆயுதப்படை பிரிவு மோட்டார் டிரன்ஸ்போர்ட் (MT) அவர்களால் பராமரிப்பு செய்யப்படுகிறது.

இறந்த கௌரியை நான் பார்க்கும் போது அவர் என்ன உடை உடுத்தியிருந்தார் என்றால் கத்தரிப்பூக்கலரில் பூ படம் போட்ட சேலை ஒன்று அசாபொ.35, பச்சை கலரில் ஜாக்கெட் ஒன்று அணிந்திருந்தார். சேலை அணிவதற்கு பெட்டிகோட் தேவையில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் பெட்டிக்கோட் யாருடையது என்றால் இறந்த கௌரியுடையது. அந்த பெட்டிகோட்டின் அளவு பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இதுபோன்ற சூழ்நிலை சாட்சிகளின் வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு எவ்வளவு விரைந்து அனுப்பப்படவேண்டுமோ அவ்வளவு விரைவாக அனுப்பி வைக்கவேண்டும் என்றும் மாண்புமிகு உயர்நீதிமன்றமும், மாண்புமிகு உச்சநீதிமன்றமும் வழியுறுத்தியுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் 31.07.2015 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள் 02.08.2015 ம்தேதியன்று நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பிவைக்கக் காரணம் என்னவென்றால் வேலை பளு காரணமாக அனுப்பிவைக்கப்படவில்லை. உண்மையிலேயே 31.07.2015 ம் தேதியன்று சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் தயார் செய்யவில்லை என்பதால் தான் முதல் தகவல் அறிக்கையுடன் சாட்சிகளின் வாக்குமூலங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் மொசக் கல் உண்மையில் மொசைக் கல் இல்லை என்றால் சரிதான். எதிரி விஸ்வநாதனிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் அசாபொ.23 LG GE 0168 சிவப்பு கலர் செல்போன் அதில் Airtel SIM 8991940000200797 5243H2 செல்போனின் CDR ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த செல்போன் உண்மையிலேயே எதிரி விஸ்வநாதனின்

செல்போன்தான் என்பதற்கு ஆதரவாக பில் ரசீது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் இறந்த கௌரியின் நகைகள் அளவு (size, quantity,. quality. design) எதுவும் இந்த வழக்கில் புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள நகைகளுக்கும் ஒத்துப்போகவில்லை என்றால் சரிதான். இந்த வழககின் புகார், பார்வை மகஜர், வரைபடம், அத்தாட்சி அனைத்தும் அசா1 ஐ தப்பிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எதிரியை இந்த வழக்கில் வேண்டுமென்றே சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன அனைத்து ஆவணங்களும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஆவணங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கௌரியை ஏற்றிச் சென்ற கார் எதற்காக அங்கு வரவழைக்கப்பட்டது என்று எனது விசாரணையில் தெரிந்துகொள்ளவில்லை. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை